# இயல் 6.2 - இயற்கணிதம்

## பயிற்சி எண் :: 6.2.1.2.D

### வினா எண் :: 1

அன்பரசு தன் மாத வருமானத்தில் 100 ரூபாயை பள்ளி நன்கொடைக்காக உண்டியலில் இடுவார். மீதம்வரும் தொகையில் நான்கில் ஒருபாகத்தை வருங்காலத்திற்காக உள்ள வங்கிசேமிப்பில் செலுத்துவார். அன்பரசு சேமிப்பில் செலுத்திய தொகையை ஒரு கணிதச்சமன்பாடாக எழுதுக.

---

அன்பரசின் மாத வருமானத்தை $x$ எனும் மாறியாகக்கொள்க.
அவர் சேமித்த தொகையை $y$ எனும் மாறியாகவும் கொள்க.

$$\text{நன்கொடை போக மீதமுள்ள தொகை} = \overbrace{\text{மாத வருமானம்}}^{x} - ₹100$$

$$= (x - 100)$$

$$\overbrace{\text{மாதம் சேமித்த தொகை}}^{y} = \frac{(x - 100)}{4}$$

$$y = \frac{(x - 100)}{4}$$

### விடை

$$y = \frac{(x-100)}{4}$$

Sum & solution prepared on Sunday 9th May, 2021 :: 12:26 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.